## கடலூரே மக்கள் கடலாய் மாறி தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் ஆர்ப்பரித்து அலை அலையாய் திரண்டனர் காணீர்!



## விடியல் பயணத்தால் மெட்ரோ ரயிலில் பயணிப்போர் எண்ணிக்கை குறைவதாகக் கூறும் பிரதமர் மோடிக்கு — பெண்கள் முன்னேற்றத்தில் அக்கறை இருக்குமா?

# மகளிர் உரிமைத் தொகையை கொச்சைப்படுத்திவிட்டு - எந்த முகத்தோடு வாக்கு கேட்டு வருகிறார், ‘காப்பி பேஸ்ட்’ பழனிச்சாமி?

## கடலூர் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

கடலூர், ஏப். 9 -

**கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (07-04-2026) மாலை, கடலூரில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில், “விடியல் பயணத்தால் மெட்ரோ ரயிலில் பயணிப்போர் எண்ணிக்கை குறைவதாகக் கூறும் பிரதமர் மோடிக்கு எப்படி பெண்கள் முன்னேற்றத்தில் அக்கறை இருக்கும்?” என்றும் “மகளிர் உரிமைத்தொகையைக் கொச்சைப்படுத்தி விட்டு இப்போது அதை உயர்த்துவோம் என்ற வாக்குறுதியுடன் எந்த முகத்தோடு வாக்குக் கேட்டு வருகிறார் காப்பி - பேஸ்ட் பழனிசாமி!” என்றும் குறிப்பிட்டார்.**

**கடலூர் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில்- கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

தரமான முந்திரி வேண்டும் என்றாலும், கடலூர்தான்! டேஸ்ட்டான பண்ருட்டி பலாப்பழம் வேண்டும் என்றாலும், கடலூர்தான்! சர்க்கரை உற்பத்திக்கும், கடலூர்தான்! இந்தியாவின் கரண்ட் உற்பத்திக்கும் கடலூர்தான்! சோழர் காலத்தில் கடல் வாணிபம் செழித்த ஊர், நம்முடைய கடலூர்! “வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்” என்று சொன்ன, கருணையே வடிவான வள்ளலார் வலம் வந்த மாவட்டம், இந்தக் கடலூர் மாவட்டம்! சிதம்பரம் நடராஜர் கோயில், பிச்சாவரம் அலையாத்திக் காடு, சில்வர் பீச் என்று இன்னும் எத்தனையோ பெருமைகள் கொண்ட மாவட்டம், நம்முடைய கடலூர்!

செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைய ஆதரவு கேட்டு, புனித டேவிட் கோட்டை அமைந்திருக்கும் கடலூருக்கு வந்திருக்கிறேன்.

### இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் நம்பர் ஒன்’ ஸ்டேட்!

தலைவர் கலைஞர் அவர்கள், ஐந்து முறை தமிழ்நாட்டை ஆட்சி செய்து, நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கினார். 2021-இல் ஆறாவது முறையாக கழக அரசு அமைந்தவுடனே, இது ‘திராவிட மாடல்’ அரசு என்று பெயர் வைத்தோம். பத்தாண்டுகளாக அ.தி.மு.க. ஆட்சி நாசம் செய்த நிர்வாகத்தையும், நிதி நிலைமையையும் நாம் சரி செய்தோம். சரி செய்தோம் என்று சொல்வதைவிட, 0.07 விழுக்காடு அளவுக்கு பழனிசாமி படுபாதாளத்தில் தள்ளிய நம்முடைய மாநிலத்தை, நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், சாதனைத் திட்டங்களால் 11.19 விழுக்காடு வளர்ச்சியுடன், இந்தியாவிலேயே ‘தமிழ்நாடுதான் நம்பர் ஒன் ஸ்டேட்’ என்று கொண்டு வந்திருக்கிறோம். அதுமட்டுமல்ல, உலகப் பத்திரிகைகள் எல்லாம் தமிழ்நாடு ‘சூப்பர்ஸ்டார் ஸ்டேட்’ என்று தலைப்புச் செய்தியாக போடும் அளவிற்கு சூப்பர் ஹிட் கவர்மெண்ட்டை கொடுத்தோம்.



திராவிட மாடலில் நாம் செய்த ஒவ்வொரு திட்டமும் ஹிட்! இன்னும் சொன்னால், சூப்பர் ஹிட்! சூப்பர் டூப்பர் ஹிட்! அடுத்து, திராவிட மாடல் 2.0-விற்கு ரெடி ஆகலாமா? நான் ரெடி. நீங்கள் ரெடியா? (‘ரெடி’ என கூட்டத்தினர் குரல்)

சாதனைத் திட்டங்களை நிறைவேற்றிய தெம்புடன் - திராணியுடன் - உரிமையுடன் உங்களிடம் நான் வந்திருக்கிறேன்.

இப்போது வேட்பாளர்களை அறிமுகப்படுத்தலாமா? என்ன தான், நம்முடைய விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் எழுச்சித் தலைவர் தொல். திருமாவளவன் அவர்கள் ஏற்கெனவே அறிமுகப்படுத்தி இருந்தாலும், இந்தக் கூட்டணிக் கட்சிகளின் தலைவர் என்ற முறையில் அதை வழிமொழிந்து, நானும் அறிமுகப்படுத்த விரும்புகிறேன்.

> **பழனிசாமி ஆட்சியின் அடையாளங்கள் என்ன?**
>
> **பொல்லாத ஆட்சிக்கு, பொள்ளாச்சியே சாட்சி!**
> **துப்புக்கெட்ட ஆட்சிக்கு தூத்துக்குடியே சாட்சி!**
> **கொடூரமான ஆட்சிக்கு கொடநாடே சாட்சி!**
> **கேடுகெட்ட ஆட்சிக்கு சாத்தான்குளமே சாட்சி!**
> **இவ்வாறு அனைத்தும் நெகட்டிவ்தான்.**
> **இதெல்லாம் பழனிசாமி ஆட்சியின் பல்லிளிக்கும் லட்சணம்.**

### குறிஞ்சிப்பாடியில் ‘வேங்கையின் மைந்தன்’ எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்!

முதலில், குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதி! நம்முடைய வெல்லும் வேட்பாளர், ‘வேங்கையின் மைந்தன்’ எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்! தமிழ்நாட்டு வரலாற்றிலேயே முதல்முறையாக வேளாண்மைக்கு பட்ஜெட் தாக்கல் செய்த அமைச்சர்தான் இவர். மண் செழித்து, விளைச்சல் பெருகி, விவசாயிகள் மகிழ்ச்சியாக இருப்பதற்குக் காரணமானவர். அவருக்கு, உதயசூரியன் சின்னத்தில் உங்களுடைய பொன்னான வாக்குகளை அளிக்க வேண்டும் என்று அன்புடனும் உரிமையுடனும் கேட்கிறேன்.

### திட்டக்குடியில் — தொழிலாளர்களின் நலனுக்காக உழைத்த சி.வெ.கணேசன்!

அடுத்து, திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி! நம்முடைய வெல்லும் வேட்பாளர், தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்து, அவர்களுடைய நலனுக்காக உழைத்த சி.வெ. கணேசன் அவர்கள்! தொழிலாளர் பிரச்சினைகளைத் தீர்த்தது மட்டுமல்ல, நம் இளைஞர்களை திறன்மிக்கவர்களாக மாற்றி, மாவட்டந்தோறும் வேலைவாய்ப்பு முகாம்களை நடத்தி, லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கச் செய்தவர். அவருக்கு, உதயசூரியன் சின்னத்தில் உங்களுடைய பொன்னான வாக்குகளை அளிக்க வேண்டும் என்று அன்புடனும், உரிமையுடனும் கேட்கிறேன்.

### விருத்தாசலத்தில் என் ஆருயிர் நண்பர் விஜயகாந்தின் மனைவி—திருமதி.பிரேமலதா!

அடுத்து, விருத்தாச்சலம் சட்டமன்றத் தொகுதி! நமது வெல்லும் வேட்பாளர் அருமைச் சகோதரி பிரேமலதா விஜயகாந்த் அவர்கள். என் ஆருயிர் நண்பர் கேப்டன் விஜயகாந்த் அவர்களுடைய மனைவி! தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் பொதுச் செயலாளர்! நண்பர் கேப்டன் உருவாக்கிய கட்சியை துணிச்சலாக நடத்தி, துரோகிகளிடம் இருந்து தமிழ்நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்று தெளிவாக முடிவெடுத்து, உறுதியுடன் நம்முடைய கொள்கைக் கூட்டணியில் இணைந்திருக்கிறார்.

அவரே சொன்னார்... சில நாட்களுக்கு முன்பு, அவரது அன்பு மகன் விஜயபிரபாகரனுக்கு ஆதரவாக விருதுநகருக்கு பிரச்சாரத்திற்குச் சென்றிருந்தேன். அப்போது, நான் பிரச்சாரக் கூட்டத்தில் குறிப்பிட்டதைத்தான், அவரும் குறிப்பிட்டார். ‘மக்கள் ஆணையிட்டால்’ படத்தில், என் ஆருயிர் நண்பர் கேப்டன் விஜயகாந்த் அவர்களுக்குப் பாட்டு பாடி வாக்கு கேட்டதை ஞாபகபடுத்தி நான் அங்கு பேசியிருந்தேன். அவரே அந்தப் பாட்டின் வரியைக் குறிப்பிட்டார். அது தலைவர் கலைஞர் எழுதிய பாடல். “ ஆற அமர கொஞ்சம் யோசிச்சுப் பாரு... நீ அடுத்து வரும் தலைமுறையை சிந்திச்சுப் பாரு... ஏற இறங்க பாத்து எடைகளைப் போடு... நீ எத்தனுக்கும் பித்தனுக்கும் தடைகளைப் போடு...” இதுதான் அந்தப் பாட்டு. இன்று, சகோதரி பிரேமலதா விஜயகாந்த் அவர்களுக்கும் உங்கள் ஆதரவைக் கேட்டு கடலூருக்கு வந்திருக்கிறேன்.

சகோதரி அவர்கள் சமீபத்தில் ஒரு கூட்டத்தில் பேசியதைப் பார்த்தேன். இங்கேயும் கூறியிருக்கிறார். “இந்தக் கூட்டணி முன்பே அமையவில்லையே என்று நான் ஃபீல் பண்ணுகிறேன்” என்று சொல்லியிருந்தார்கள். உண்மை! இது எப்போதோ அமைந்திருக்க வேண்டிய கூட்டணிதான்! பரவாயில்லை, லேட்டாக வந்தாலும் லேட்டஸ்டாக நம்முடைய வெற்றிக் கூட்டணியில் இணைந்திருக்கிறார்கள். நிச்சயமாக பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் அவர்கள் வெற்றி பெறுவார்கள்.

2006-இல் கேப்டனுக்கு வெற்றியைத் தந்தது போன்றே, 2026 தேர்தலில் சகோதரி பிரேமலதா அவர்களுக்கும் முரசு சின்னத்தில் நீங்கள் வாக்களித்து வெற்றி பெற வைக்க வேண்டும் என்று உரிமையுடன் நான் கேட்கிறேன்.

அடுத்து, காட்டுமன்னார்கோவில் சட்டமன்றத் தொகுதி! என்னுடைய இனிய சகோதரர் எழுச்சித் தமிழர் தொல். திருமா அவர்கள் ஆதரவு பெற்ற நமது வெல்லும் வேட்பாளர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த ஜோதிமணி அவர்கள். ஒடுக்கப்பட்ட மக்களின் ஒளிவிளக்காகத் திகழ்ந்த பெரியவர் இளையபெருமாள் அவர்களின் அருமை மகன்! பொறியாளராக இருந்து, பொதுத் தொண்டு ஆற்றும் ஆர்வத்துடன் களம் காண்கிறார். அவருக்கு, பானை சின்னத்தில் உங்களுடைய பொன்னான வாக்குகளை அளிக்க வேண்டுமென்று அன்புடனும், உரிமையுடனும் கேட்கிறேன்.

அடுத்து, கடலூர் சட்டமன்றத் தொகுதி! நமது வெல்லும் வேட்பாளர் - காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்த ஏ.எஸ். சந்திரசேகரன். சட்டக் கல்லூரியில் படித்த காலத்திலேயே காங்கிரஸ் தொண்டராக சேவையாற்றத் தொடங்கியவர். இன்றைக்கு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மாநிலச் செயலாளராகச் செயல்பட்டு வருகிறார். அவருக்கு, கை சின்னத்தில் உங்களுடைய பொன்னான வாக்குகளை அளிக்க வேண்டும்.

அடுத்து, சிதம்பரம் சட்டமன்றத் தொகுதி! நமது வெல்லும் வேட்பாளர் மனிதநேய ஜனநாயகக் கட்சித் தலைவர் தமிமுன் அன்சாரி அவர்கள்! சிறுபான்மைச் சமூக மக்களின் உரிமைகளுக்காக தொடர்ந்து குரல் கொடுக்கக் கூடியவர். விவாதங்களிலும், ஏன், ஏற்கெனவே சட்டமன்றத்திலும் ஆணித்தரமாகப்

தொடர்ச்சி 12–ஆம் பக்கம்